# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● செப்டம்பர் 23, 2017

Weekly E-paper ● September 23, 2017


# தமிழக அரசியலில் ரஜினி - கமல்!

● சுப.வீரபாண்டியன்

**தமிழ்நாட்டுக்கு நான் முதல்வராகத் தயார் என்கிறார் கமல்ஹாசன்.**

**அவரை முதல்வராக்கத் தயாரா என்று மக்களிடம்தான் கேட்க வேண்டும்.**

ஒரு தேசத்தின் அரசியல் எப்படித் தீர்மானிக்கப்படுகிறது என்பதும், அதனை யாரெல்லாம் தீர்மானிக்கிறார்கள் என்பதும் மிக முதன்மையானவை! தமிழ்நாட்டின் அரசியலை, அரசியலற்ற செய்திகளும், அரசியலை விட்டு விலகி நிற்போர்களுமே பல நேரங்களில் தீர்மானிக்க முயல்கின்றனர் என்பது நடைமுறை உண்மை.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக, ரஜினி, கமல் இருவரும் அரசியலுக்கு வருவார்களா என்பதே ஊடகங்களின் விவாதப் பொருளாக இருந்தது. இப்போது அவர்கள் அரசியலை நோக்கிச் சில அடிகளை எடுத்து வைத்துள்ளனர் என்பது தெரிகிறது.

அவர்கள் எந்தத் திசையிலிருந்து வருகின்றனர் என்பது முக்கியமன்று. எந்தத் திசை நோக்கிப் பயணிக்கின்றனர் என்பதே முக்கியமானது. நடிகர் கமலைப் பொறுத்தவரையில், வெளிப்படையாகவே இன்றைய தமிழக ஆளுங்கட்சியை விமர்சித்து வருகின்றார். இந்த ஆட்சி நீக்கப்படவேண்டிய ஒன்று என்னும் அளவிற்குத் தன் கருத்தைக் கூறுகின்றார். நடிகர் ரஜினியோ அப்படியெல்லாம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. வெளிப்படையாக எதனையும் பேசவும் இல்லை. அவர் அரசியலுக்கு வருவது முடிவாகி விட்டது என்று தமிழருவி மணியன்தான் மாநாடு கூட்டிச் சொல்கின்றார். அதனை ரஜினி மறுக்கவில்லை. மௌனம் சம்மதம் என்றுதான் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இப்போதுதான் பிரதமர் மோடியின் இரண்டு திட்டங்களை ஆதரித்து ஒரு செய்தி வெளியிட்டுள்ளார்.

கமலின் அரசியலில் நமக்கு இரு பெரும் கேள்விகள் இருக்கின்றன. ஒன்று, அவர் எந்த சித்தாந்தத்தையும் முன்னிறுத்தி அரசியலுக்கு வருவதாகச் சொல்லவில்லை. ஊழல் ஒழிப்பு அரசியல் என்கிறார். இது பொத்தாம் பொதுவானது. இரண்டாவது, தமிழக ஆளுங்கட்சியை நேரடியாகத் தாக்கும் அவர், மத்தியில் உள்ள ஆளுங்கட்சியை மறைமுகமாகக் கூடத் தாக்கவில்லை.

எத்திசை நோக்கினும் ஊழல் மலிந்து கிடக்கும் இன்றைய சூழலில், ஊழல் ஒழிப்பு மிகத் தேவையானதுதான். ஆனால் அது மட்டுமே ஓர் அரசியல் கட்சியின் ஒற்றை நோக்கமாக இருக்க முடியாது. ஒரு பேச்சுக்கு, ஊழலை ஒழித்து விட்டோம் என்றே வைத்துக் கொள்வோம், பிறகென்ன செய்வோம் என்று கூற வேண்டாமா?

இந்தியைத் திணிப்பது, மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பது, மத நல்லிணக்கத்தைக் குலைப்பது போன்ற செயல்கள் எல்லாம் நாட்டில் இருந்துவிட்டுப் போகட்டும் என்று சொல்ல முடியுமா? இவை குறித்தெல்லாம் எதுவும் பேசாமல், ஊழலை ஒழிப்பது குறித்து மட்டுமே பேசுவது, தெளிவற்ற நோக்கத்தை அல்லது தெளிவான உள்நோக்கத்தைக் காட்டுகின்றது.

மேலும் ஊழல் என்பது வெறுமனே பணம், நகை சார்ந்தது மட்டுமில்லை. சில சாமியார்களை, அரசுக்கு வெளியில் இருக்கும் அதிகார மையங்களாக வைத்துக் கொண்டு, நாணயமான அரசியலுக்குப் புறம்பாகவும், நாட்டின் பொருளாதாரத்திற்குச் சீர்கேடாகவும் நடந்து கொள்வதும் ஊழல்தான். அது குறித்தெல்லாம் கமல் கவலை கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. காங்கிரஸ் ஆட்சியில் ஊழலை ஒழிக்கப் புறப்பட்ட வீராதி வீரர்களான அன்னா அசாரே, கிரண் பேடி எல்லோரும் இப்போது என்ன ஆனார்கள்? ஒருவர் ஊமையானார், இன்னொருவர் துணை நிலை ஆளுநர் ஆனார்.

ரஜினியின் முதல் கீச்சே (டுவீட்) அவருடைய பாதை எது என்பதை நமக்குச் சொல்லிவிட்டது. மோடியின் தூய்மை இந்தியா அவருக்கு மிகவும் பிடிக்கிறதாம். அடுத்து, பண மதிப்பிழப்புத் திட்டமும் நல்ல திட்டமாம். இந்தியாவின் தூய்மையின்மையை வெறும் துடைப்பம் கொண்டு துடைத்துவிட முடியாது. இந்தியாவின் தூய்மைக்கு இரண்டு துடைப்பங்களும், நான்கு காமராக்களும் போதும் என்று மோடி நினைக்கிறார். அதனை ரஜினி பாராட்டுகிறார்.

1000, 500 ரூபாய்த் தாள்கள் செல்லாது என்று அறிவிக்கப்பட்டதைக் 'கறுப்புப் பணம் என்றால் என்ன என்றே அறியாத' பெரிய மனிதர்கள் எல்லோரும் பாராட்டுகின்றனர். வெள்ளைப் பணத்தைக் கூடப் பார்க்காத ஏழை, எளிய மக்களே அல்லல் படுகின்றனர்.

எடப்பாடி அரசு என்னும் எடுபிடி அரசை முட்டுக்கொடுத்து மத்திய அரசு காப்பாற்றுவதே, இன்னும் பல அவமானங்கள் அந்த அரசுக்கு ஏற்பட வேண்டும், அதிமுக என்று ஒரு கட்சியே இல்லாமல் போய்விட வேண்டும் என்பதற்காகத்தான். ரஜினி, கமல் போன்றவர்களின் துணையோடு அந்த இடத்தைத் தான் பிடித்துவிட வேண்டும் என்பதே பாஜக வின் திட்டம்.

திட்டம் போடுவதற்கு எல்லோருக்கும் உரிமையிருக்கிறது. ஆனால் வெற்றி பெறுவதற்கு எல்லோருக்கும் வாய்ப்பிருப்பதில்லை!

●



ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுவோர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## வேடசந்தூரில் பெரியார் பிறந்தநாள்




**தி**ராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பாக வேடசந்தூரில் தந்தை பெரியாரின் 139ஆம் பிறந்த நாளை 17.09.2017 அன்று பேரவையின் அமைப்புச் செயலாளர் (பொறுப்பு) ப.புலேந்திரன், தென் மண்டலச் செயலாளர் ஞானசேகரன், பார்த்திபன் ஆகியோர் இணைந்து சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

## ரிசர்வ் வங்கி – பெரியார் பிறந்தநாள்

**18.9.2017** அன்று இந்திய ரிசர்வ் வங்கியின் ஓ.பி.சி. ஊழியர் சங்கம் சார்பாக நடைபெற்ற தந்தை பெரியாரின் 139 ஆம் பிறந்த நாள் விழாவில் பேரவைப் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன்.




## தோழர் தமிழ்மறவன் இல்லத் திருமணம்



**தி**ராவிட இயக்கத் தமிழர் பேரவையின் வடக்கு மண்டலச் செயலாளர் தோழர் தமிழ்மறவனின் மகள் ஜா.சைலா - ஷாஹின்ஷா இணையரின் திருமணம், பேரவையின் பொதுச் செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன் மற்றும் பேரவையின் தோழர்களின் வாழ்த்துகளுடன் 17.9.2017 அன்று திருவள்ளூர் மாவட்டம் ஆரணி புதுவயலில் சிறப்பாக நடந்தேறியது.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## மாநில சுயாட்சி..!..?

**மா**நிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற முழக்கத்தை முதல்முதலாக எழுப்பியது திராவிட இயக்கம்.

மறைந்த முரசொலி மாறன் எழுதிய ‘மாநில சுயாட்சி’ என்ற பெருநூல் அதன் பிரகடனம். இப்போது மாநில சுயாட்சி மாநாடு ஒன்றினைச் சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நடத்தியுள்ளது.

பா.ஜ.க.வின் மதவாத வெறியைத் தன்னுள் ஏற்றிக் கொள்ளாத அந்தக் காங்கிரஸ் காலத்திலேயே, மாநில சுயாட்சி என்ற சித்தாந்தம் மேலெழத் தொடங்கிவிட்டது தமிழ்நாட்டில்.

இன்று பா.ஜ.க.வின் மிருக பலத்தால் அமைந்துள்ளது மத்தியில் அதன் ஆட்சி.

அதற்காகப் பன்முகத் தன்மைக் கொண்ட இந்தியாவை, ஒற்றை ஆளுமையின் கீழ் கொண்டுவருவது எப்படிச் சரியாகும்?

இது இந்திய அனைத்து மாநில உரிமைகளையும் ஒழித்துக் கட்டுவதற்கான சதி அல்லவா!

நீட் தேர்வுத் திணிப்பு, ஜி.எஸ்.டி. வரி, நவோதயா பள்ளிகளை வலுக்கட்டாயமாகத் திணித்தல், சமஸ்கிருத பாடத்திட்டத்தைக் கொண்டுவர எடுக்கும் முயற்சி, வந்தே மாதரம், மாட்டிறைச்சித் தடை இப்படிச் சமூக நீதியை உருக்குலைத்து மாநில அரசு அதிகாரங்களை நசுக்கிக் கொண்டும், அழித்துக் கொண்டும் இருக்கிறது பா.ஜ.க. அரசு.

சிந்து நாகரிகத்தை விட முந்தையதும், சிறப்பு வாய்ந்ததுமாக இருக்கும் கீழடி அகழ்வாராய்ச்சியை இழுத்து மூடி அழிக்க நினைக்கிறது.

காரணம் வந்தேறிப் பார்ப்பனர்கள் இந்தியாவைச் சொந்தம் கொண்டாடுவதைத் தகர்த்தெறிகிறது கீழடி அகழ்வாய்வு.

இதனால்தான் ‘‘மத்திய பா.ஜ.க. ஆட்சியால் ஏற்பட்டுள்ள விளைவினால்தான், இன்றைக்கு மாநில சுயாட்சி மாநாடு நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது’’ என்று தி.மு.க. செயல் தலைவர் தளபதி ஸ்டாலின் பேசியிருக்கிறார்.

இது தமிழகம் என்ற மாநிலத்தின் பிரச்னை மற்றுமன்று. அனைத்து இந்திய மாநிலங்களின் பிரச்னை இது.

மாநிலங்களின் உரிமைகளுக்கான உயிர்நாடிப் போராட்டம் என்றே இதை சொல்லவேண்டும்.

மாநில சுயாட்சி என்பது சமூக நீதிக்குள் அடங்கும்.

இச்சமூக நீதியைக் காக்க இந்திய அளவில் மாநில சுயாட்சி மாநாடுகள் நடத்தப்பட வேண்டும்.

இதன் முதல் மாநாடு அனைத்து இந்தியத் தலைவர்களையும் இணைத்துத் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் முன்னின்று நடத்த வேண்டிய அவசியம் இன்றைய காலத்தின் கட்டாயம்.




## திருப்பூரில் பெரியார்...

**தி**ராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பாக தந்தை பெரியாரின் 139ஆம் பிறந்த நாளையொட்டி ‘‘சமூகநீதியைப் பாதுகாப்போம்; மனுதர்மத்தை வேரறுப்போம்’’ என்ற தந்தை பெரியாரின் முழக்கத்துடனான சுவரொட்டிகள் நகரெங்கும் ஒட்டப்பட்டிருந்தன.



# நாகாலாந்து நடந்ததும் நடப்பதும்.

● உதயகுமார்

மாநிலங்களின் உரிமைகள் பறிபோய்க் கொண்டிருக்கும் இந்நேரத்தில் மாநில உரிமைகள் பற்றிய உரையாடலைத் தொடர்ந்து எடுத்துச்செல்லும் வகையில், சாதியற்ற பாலினச் சமத்துவமுள்ள தமிழ்ச்சமூகத்தை இலக்காகக் கொண்டு இயங்கி வரும் புதிய குரல் அமைப்பு 16.09.2017 அன்று சென்னையில் சிறப்புக்கருத்தரங்கம் ஒன்றை நடத்தியது.

வடகிழக்கு இந்திய மக்கள் நலச் சங்கம், சென்னைக் கிளையின் தலைவர் வபாங் தோஷி அவர்கள் நாகாலாந்தின் கடந்த காலப் போராட்ட வரலாற்றையும், தற்போதும் தொடர்ந்து கொண்டிருக்கும் உரிமைக்கான முழக்கங்களையும் சிறப்பாக எடுத்துரைத்தார். அவ்வுரையின் சாரம் பின் வருமாறு.

நாகாலாந்து என்றால் அது தற்போது இருக்கும் 16,000 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட நாகாலாந்து அன்று. உண்மையான நாகாலாந்து என்பது 1,20,000 சதுர கி.மீ. க்கும் அதிகமான பரப்பளவு கொண்டது. இப்பகுதி தற்போது இரண்டாகப்பிரிக்கப்பட்டு ஒரு பகுதி இந்தியாவிலும் மற்றொரு பகுதி மியான்மரிலும் உள்ளது. நாகாலாந்தின் இப்பிரிவை வேடிக்கையாக இப்படிச் சொல்வார்கள். இந்தியாவில் உள்ள நாகாலாந்தில் கிரிக்கெட் விளையாடும் போது பவுண்டரி அடித்தால் அது பர்மாவுக்குச்(மியான்மர்) சென்றுவிடும்.

'நாகா' என்னும் சொல்லுக்குப் பல்வேறு பொருள்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. சிலர்பாம்புகளை வழிபடுகிறவர்கள் என்றும் சிலர் மதப்பற்று உடையவர்கள் என்றும், துறவிகள் என்றும் எண்ணுகின்றனர். ஆனால் இவை எதுவும் உண்மையல்ல. 'நாகா' என்று சொல்லாமல் 'நாக்கா' என்று சொல்வதே சரியானதாகும். நாகாலாந்து என்பது இந்தியாவிற்கு வடகிழக்கிலும் பர்மாவிற்கு மேற்கிலும் நாகா இன மக்கள் வாழும் பகுதி என்பதாகும்.

நாகா மக்கள் முழுச்சுதந்திரத்தோடு பல தலைமுறைகளாக வாழ்ந்து வந்தனர். எந்த முடியாட்சிக்குக்கீழும் நாகாக்கள் இருந்ததில்லை. ஆனால் முதல் முறையாக பிரிட்டீசார் 1832ல் அசாமிற்கும் மணிப்பூருக்கும் இடையே நேர்வழியைக் கண்டுபிடிக்க முயற்சித்தபோது நாகாலாந்திற்குள் நுழைந்தார்கள். அவர்களை அப்போது அனைத்து நாகா கிராமங்களும் எதிர்த்தன. அதுவே அந்நியர்களுக்கு எதிரான நாகா மக்களின் முதல் போராட்டமாகும்.

பிரிட்டீசார் நாகாலாந்தையும் தங்கள் ஆளுமைக்குக்கீழ் கொண்டுவர எண்ணினார்கள். ஆனால் அவர்களால் அவ்வளவு எளிதில் அதைச் செய்யமுடியவில்லை. நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களால் நாகாலாந்தைக் கைப்பற்ற முடிந்தது. 1879ல் தற்போது நாகாலாந்தின் தலைநகரமாக இருக்கும் கொகிமாவிற்கு அருகில் உள்ள கிராமத்தில் நடந்த போரில் பிரிட்டீசார் நாகா மக்களைத் தங்கள் ஆயுத பலத்தால் முறியடித்தனர். பின்னர் 1880ல் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு பிரிட்டீஷ் ஆட்சிக்குக்கீழ் நாகாலாந்து கொண்டு வரப்பட்டது. பிரிட்டீஷ் ஆட்சியின் நற்பயனாக, அதற்கு முன் தனித்தனி கிராமங்களாக இருந்த நாகா மக்களெல்லாம் ஒரே அடையாளத்திற்குள் கொண்டு வரப்பட்டனர். இது நாகா மக்களிடையே ஒற்றுமையை வலுப்படுத்தியது.

முதல் உலகப் போரின் போது பிரிட்டீசார் 'Naga Labourer Company' என்ற ஒன்றைத்தொடங்கி தங்களுக்காகப் போரிட அவர்களைப் பிரான்சிற்கு அனுப்பினார்கள். மேற்கத்திய நாடுகளைப் பார்த்து விழிப்புணர்வு பெற்ற அவர்கள், முதல் உலகப் போர்முடிந்து நாகாலாந்து திரும்பியவுடன் 1918 ல் 'நாகா கிளப்' என்ற அமைப்பைத் தொடங்கினார்கள். அதுவே நாகா மக்கள் அனைவரும் ஒன்றாகக் கூடுவதற்கு வழிவகை செய்தது. 1929ல் சைமன் கமிஷன் நாகாலந்திற்கு வந்த போது 'நாகா கிளப்' பிரதிநிதிகள் ஒரு மனு அளித்தார்கள். அம்மனுவில் "பிரிட்டீஷ் அரசாங்கம் எங்களுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்று எண்ணினால், தயவு செய்து எங்களை வேறு யாருடைய கருணையின் கீழும் விட்டுவிட வேண்டாம். நாகாலாந்து பழைய காலங்களில் எப்படி இருந்ததோ அப்படியே விட்டுவிடும்படி கேட்டுக்கொள்கிறோம்." என்று விளக்கியிருந்தார்கள்.

பிப்ரவரி 2, 1946ல் நாகா கிளப், "நாகா நேசனல் கவுன் சில்" (NNC) ஆக மாற்றப்பட்டது. ஏப்ரல் 9, 1946ல் கேபினட்மிஷன் இந்தியாவிற்கு வந்த போது, NNC குழுவினர் டெல்லி சென்று தங்களை இந்திய ஒன்றியத்துடன் இணைக்க வேண்டாம் என்று கோரிக்கை விடுத்தனர்.



பின்னர் 1946ல் வடகிழக்குப் பகுதிகளுக்காக ஒரு துணைக்கமிட்டி அமைக்கப்பட்டு அதன் கூட்டம் ஷில்லாங்கில் நடைபெற்றது. வடகிழக்கின் மற்ற பகுதிகளைச்சேர்ந்த பிரதிநிதிகள் தங்கள் பகுதிகளை இந்திய ஒன்றியத்தோடு இணைக்க ஒப்புக் கொண்டபோது, NNCயின் தலைவர் அலிபா "நாங்கள் இந்திய ஒன்றியத்தின் கீழ் இருக்க இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடமாட்டோம். இதில் கையொப்பமிட்டு விட்டு, என்னுடைய மக்களிடம் துரோகியாக நான் திரும்ப முடியாது." என்று கூறிவிட்டு வெளிநடப்புச் செய்தார்.

ஜூலை 19, 1947ல் இந்திய சுதந்திரத்திற்கு முன்னர் NNC பிரதிநிதிகள் டெல்லியில் காந்தியாரைச் சந்தித்தனர். நீண்ட கலந்துரையாடலுக்குப்பின் காந்தியார், "இந்திய ஒன்றியத்துடன் இணைய விரும்பவில்லை என்றால், சுதந்திரமாக இருப்பதைற்கு நாகாலாந்திற்கு அனைத்து உரிமையும் உண்டு" என்று உறுதியளித்தார். அதன் படி நாகாலாந்து 14, ஆகஸ்டு 1947 இல் நாகாலாந்து சுதந்திரத்தை அறிவித்தது.

இது ஐ.நாவின் பொதுச் செயலாளருக்கும் தெரிவிக்கப்பட்டது. ஐ.நாவும் இந்தியாவிற்குச் செய்தி அனுப்பியது. எல்லா ஆண்டும் நாகாலாந்து ஆகஸ்டு 14ல் தான் சுதந்திர தினத்தைக்கொண்டாடுகிறது. இதை இந்திய அரசு எதிர்த்தது. NNC தலைவர்களைப் பிரிவினைவாதிகள் என்றும் மிதவாதிகள் என்றும் குற்றம் சாட்டியது. நாகா மக்களின் ஒருமித்த கருத்தை இந்தியாவிற்குத் தெரிவிக்க பொது வாக்ககடுப்பு நடத்த இந்திய குடியரசுத்தலைவருக்கு மனு அளித்தனர். அது பொருட்படுத்தப்படவில்லை. பின் னர் மே 16, 1951ல் பொது வாக்ககடுப்பு நடத்தி அந்த வாக்குச்சீட்டுகளை ஒன்றிணைத்து, 80 பவுண்ட் கொண்ட ஒரு புத்தகமாக இந்தியக்குடியரசுத் தலைவருக்கு அனுப்பினார்கள். ஆனாலும் எந்தப்பயனும் இல்லை.

1952ல் இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது நாகாலாந்து மக்கள் அதனை முழுமையாகப் புறக்கணித்தார்கள். காலி வாக்குப் பெட்டிகளையே திருப்பி அனுப்பினர்.

(அடுத்த இதழில் நிறைவடையும்)




# வாசிப்பை வசப்படுத்துவோம்

● சிவதி

ஒரு நல்ல வாசகன் வாசிப்பை முடிப்பதேயில்லை என்றார் மார்க் ட்வைன். மனிதனையும் விலங்குகளையும் பிரிப்பது வாசிப்புத்தானே. வாய்ப்பு வசப்படும் போதெல்லாம் நாம் படித்துக்கொண்டே இருக்க வேண்டும். வாசிப்பு வசப்பட்டால்தான் உலகில் உலவும் உண்மைகளை அறிய முடியும். கல்வி மறுக்கப்பட்ட சமூகத்தில் கல்விக்கான வாய்ப்பு வரும்போது புரட்சிக்கவியும் 'நூலைப் படி சங்கத்தமிழ்

நூலைப்படி முறைப்படி

நூலைப்படி

காலையில் படி கடும்பகல் படி

மாலை இரவு பொருள்படும்படி' என படித்துக்கொண்டே இரு என்கிறார்.

வேலையினைச் சுமந்து கொண்டு அல்லும் பகலும் உழைக்கும் நமக்கு எப்போது படிக்க நேரம் வாய்க்கும் என அலுத்துக் கொள்வோரும் உண்டு. ஆனால், நாம் பேருந்துக்கெனவும், மருத்தவரிடமும், மேல் அலுவலரிடமும், இல்லை ஏதேனும் ஒன்றுக்காக வரிசையில் காத்திருக்கும் தருணம் ஒரு நாளில் ஒரு முறையாவது வாய்த்துவிடுகிறது. இந்நேரங்களில் நமது விலைமதிப்பற்ற நேரம் கற்பூரமாய்க் காற்றில் கரைகிறது. இதனை எப்படிப் பயனுள்ள முறையில் மீட்பது என்பதற்காகவும் வாசிப்பினை வசப்படுத்தவும் ஒரு அற்புதமான செயலி உள்ளது.

இப்போது தொழில் நுட்பம் வளர்ந்து வருகிறது. நீங்கள் நினைப்பது போல் புத்தகம் என்பது காகிதம், மேல் அட்டை, அச்சடிக்க தாள்கள் என்ற அமைப்பிலேதான் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. மின்னணு வடிவில் இப்போது புத்தகம் வந்துவிட்டது. ஆம் அது அமேசான் கிண்டில் (Kindle) என்கிற மின் புத்தகம். இது பார்க்க டேப் கணினி போல் இருக்கும். இதன் விலை 7 ஆயிரத்தில் இருந்து 21 ஆயிரம் வரையில் ஆகும். அடேங்கப்பா அவ்வளவா? என வாய்பிளப்பவர்களுக்கு ஓர் ஆறுதல் செய்தி இருக்கிறது. ஆம் அந்த கிண்டிலின் வசதியினை நாம் எப்போதும் கைகளில் வைத்திருக்கும் திறன் பேசியிலேயே வரவழைக்க முடியும்.

அதற்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இவ்வளவே தான். Google Play Store க்குச் செல்லுங்கள். Kindle எனத் தட்டச்சு செய்யுங்கள். ஒருவர் மரத்தடியில் உட்கார்ந்து படிப்பது போன்று ஒரு செயலி இருக்கும். இதனை நிறுவிக் கொள்ளுங்கள். உங்களுக்கான கணக்கினை ஆரம்பியுங்கள். பயப்படாதீர்கள் பாரத ஸ்டேட் வங்கி போன்று ஐந்தாயிரம் பணம் இருந்தால்தான் கணக்குத் தொடங்குவேன் பேர்வழி என்கிற கெடுபிடியெல்லாம் இங்கு இல்லை. வாசிக்க வேண்டும் என்ற ஆர்வமிருப்பவர் எவரும் கணக்குத் தொடங்கலாம்.

மேலே தேடுதல் திரை வழியே உங்களுக்குத் தேவையான புத்தகத்தின் பெயரைத் தட்டச்சு செய்து தேட ஆரம்பியுங்கள். புத்தகத்தின் தலைப்பையோ அல்லது எழுதிய ஆசிரியரின் பெயர்கொண்டோ, பதிப்பகத்தின் பெயர் கொண்டோ தேடினால் விவரங்கள் கிடைக்கும். இலவசப் புத்தகங்களில் தொடங்கி ஆயிரக்கணக்கான விலையுள்ள புத்தகங்கள் வரை கிடைக்கும். அமேசான் கிண்டிலில் ஏறத்தாழ 1.5 மில்லியன் புத்தகங்கள் உள்ளனவாம். தேவையான புத்தகத்தினைத் தரவிரக்கம் செய்து படிக்க வேண்டியதுதான்.

இதில் பல்வேறு மொழிகளைச் சார்ந்த புத்தகங்கள் கிடைக்கின்றன. இப்போது இந்திய மொழிகளிலும் ஏராளம் இறங்கியுள்ளது. நமது தமிழ் மொழி எட்டுக்கால் பாய்ச்சலின் வேகங்கொண்டு பிற இந்திய மொழிகளுக்குச் சவால் விடும் வகையில் முதன்மையான இடத்தை நோக்கி பயணிக்கிறது.

அது மட்டுமல்ல ஆங்கிலப் புத்தகம் படிக்க இது மிகச்சிறந்த தளம். ஏனெனில் தெரியாத, புதிய சொற்களுக்கு நீங்கள் அகர முதலி தேடிப் போகவேண்டியதில்லை. அந்தச் சொல்லைத் தேர்வு செய்தால் போதும் அதற்கான பொருள் அந்த நொடியே உங்கள் சுட்டுவிரல் நுனியில் வந்துவிடும்.

உங்கள் உள்ளங்கவர் பத்திகளை நீங்கள் மேற்கோளிட முடியும். அந்தப் பகுதியினை உடனடியாகச் சமூக வலைத்தளங்களில் பகிரவும் முடியும் என்பது கூடுதல் சிறப்பு. உங்களுக்கு வரும் மின்னிதழ்கள், நூல்கள், பத்திகள் பகுதிகள் எதுவானாலும் அதனை கிண்டிலில் இணைத்துக்கொள்ள முடியும். அது மட்டுமல்ல ஒரு கணக்கில் டேப் கணினி, கணினி, திறன்பேசி என நீங்கள் பார்வையிடலாம். இணையத்துடன் இணைந்தால் அதுவாகவே தரவுகளோடு ஒத்திசைவு (Synchronize) ஆகிவிடும். தரவுகள் தவற விடுவதற்கான வாய்ப்புகள் இல்லை.

புத்தகக் கடைகளில் பார்த்திருக்கிறேன், சில புத்தகங்கள் வாசகர்கள் கைபட்டு அழுக்கடையாமல் இருக்க பாலித்தீன் கவர்கள் கொண்டு பேக் செய்யப்பட்டிருக்கும். இதனால் புத்தகத்தினைப் பற்றி ஏதும் அறிய முடியாது. சில நேரங்களில் இது கதையா, கட்டுரையா, புதினமா, கவிதை நூலா என்று கூட அறிய முடிவதில்லை. பின் அட்டையில் ஆசிரியருக்கு நெருக்கமானவர் ஆகா, ஓகோ வென எழுதியிருப்பதை நம்பிச் சில நேரங்களில் வாங்கிவிடுவோம். ஆனால் அது நமக்கு விருப்பமில்லாத, அல்லது உடன்படாத புத்தகமாகக் கூட இருக்கக் கூடும்.

கிண்டிலில் இந்தப் பிரச்சனையே இல்லை. எந்த புத்தகமானாலும் 10 பக்களை மாதிரிகளாகப் பெறமுடியும். எத்தனையாவது பதிப்பு, முன்னுரை, புத்தகத்தின் ஒரு பகுதி என நீங்கள் படித்துப்பார்த்து பிடித்திருந்தால் வாங்கிக் கொள்ளலாம். அச்சுப்புத்தகத்தின் விலையில் ஏறக்குறைய பாதி விலையில் கிடைக்கிறது. தமிழில் தேடுதல் வசதி கொடுத்திருப்பதால் நீங்கள் ஒரு குறிச்சொல்லினை வைத்து நூலின் எந்தப் பகுதிக்கும் சென்று தேடிப்பெறலாம். மேற்கோளிடலாம். எழுத்துகளைப் பெரியதாக்கிப் படிக்கலாம். இரவு நேரங்களில் கண்கள் கூச்சமின்றி படிக்க வசதியாகத் திரை அமைப்பினை மாற்றிக் கொள்ளலாம்.

கிண்டில் வாசிப்பு நிச்சயமாக அடுத்த தலைமுறைக்கானது. இதனால் பல நன்மைகள் உண்டு. இனி பழைய புத்தகம் ஏதும் தொலைந்துவிட்டது என்ற சொல்லுக்கும் இடமில்லை, மறுபதிப்பு வரவில்லை என்று காத்திருக்கவும் தேவையில்லை. நாட்டுடைமை ஆக்கப்பட்ட பல தமிழ் புத்தகங்கள் யாவும் கிண்டிலில் இலவசமாக வரவிருக்கின்றன. இப்போதே சில புத்தகங்கள் இலவசமாக கிடைக்கின்றன. காத்திருக்கும் நேரத்தில் உங்களுக்கு விருப்பமான புத்தகத்தைத் தரவிறக்கம் செய்து உங்கள் திறன் பேசியிலேயே படித்துக் கொள்ளலாம். PDF வடிவில் உள்ள பக்கங்களைக் கூடத் தங்கு தடையின்றி வாசிக்க முடியும். கருஞ்சட்டைத் தமிழர் இதழினை அதில்வாசிக்கவும் முடிகிறது, சேமித்து வைக்கவும் முடிகிறது.

இணையத்தில் இலவசமாக ஏராளமான தமிழ் மின்னூல்கள் கிடைக்கின்றன. இவற்றைத் தரவிறக்கம் செய்து படிக்கலாம். கல்கி, ஜெயகாந்தன், புதுமைப்பித்தன் படைப்புகள் உட்பட பல்வேறு அரிய நூல்கள் விலையின்றிக் கிடைக்கின்றன.

மக்கள் தொடர்ந்து அறியாமையில் இருக்க இப்போது ஆளும் அரசு குடி, குடி, சாகும் வரை குடி என்கிறது.

மக்கள் விரோத அரசினை அகற்ற, தொழில் நுட்ப உதவியுடன் படி, படி அடிமைச் சங்கிலி அறுபடும் வரை படி என்கிறார்கள் முற்போக்குச் சிந்தனையாளர்கள். நாள்தோறும் படிப்போம். இந்த உலகம் அன்பாலும் அறிவாலும் ஆளப்படட்டும். ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.